**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 438/2019 P.W.5/Additional Witness**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. செல்வின் ஜோஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **08.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது குளச்சல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். அங்கு பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ரசலையன், பயிற்சி உதவி ஆய்வாளர் டேனியல், காவல் ஆய்வாளர்கள் ராஜ் மற்றும் சிவராஜபிள்ளை ஆகியோரின் கையொப்பம் ஆவணங்களை பரிசீலனை செய்யும் பொழுது எனக்கு நன்கு தெரியும் என்பதால் நான் தற்பொழுது ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 19.03.2015–ம் தேதி 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ரசலையன் என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்த பொழுது முத்துநியூரோ சென்டரில் கிடைத்த தகவலின் படி அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செல்வராஜ் என்பவர் சுயநினைவுடன் இல்லாததால் அவரது மனைவி மஞ்சுளா என்பவரிடம் புகார்மனு பெற்று 13.00 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 105/2015 சட்டப்பிரிவுகள் 279, 337 இ.த.ச சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. புகார் வாக்குமூலத்தின் அசலையும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான பயிற்சி உதவி ஆய்வாளர் டேனியல் என்பவரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

4. இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அவர் சம்பவயிடம் 20.03.2015–ம் தேதி 14.00 மணிக்கு சென்று சாட்சிகள் கிறிஸ்து தாஸ் மற்றும் எட்வர்ட் சுஜின் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னர் சாட்சிகள் 1 முதல் 9 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார். காயம்பட்ட செல்வராஜ் என்பவர் சிகிச்சை பலனின்றி 20.03.2015–ம் தேதி இறந்துவிட்ட படியால் வழக்கு கோப்பினை சட்டப்பிரிவினை 279, 337, 338, 304A இ.த.ச ஆக மாற்றம் செய்து தொடர் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ராஜ் அவர்கள் விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

6. பின்னர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் இறந்து போன நபரான செல்வராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது 21.03.2015–ம் தேதி 08.30 மணிக்கு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்து பிரேதத்தை உறவினரிடம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்துள்ளார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 குறியீடு செய்யப்படுகிறது.**

7. மேலும் சடலக் கூறாய்வு செய்த மருத்துவரிடம் சடலக் கூறாய்வு அறிக்கை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த சடலக் கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் இவ்வழக்கில் காயம்பட்ட ரிச்சர்ட் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் காயச்சான்றிதழ் பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. மேலும் விபத்து ஏற்படுத்திய வாகனங்களான TN75J8997 TVS Wego இருசக்கர வாகனம் மற்றும் TN75E6825 என்ற எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர

வாகனத்தையும் வாகன ஆய்வுக்கு அனுப்பி ஆய்வறிக்கைகள் பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. பின்பு இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் சிவராஜபிள்ளை என்பவர் சாட்சிகளை விசாரித்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இத்துடன் விசாரணையை முடித்துக் கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 279, 337, 338 மற்றும் 304 A இ.த.ச சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.